Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com

Websites
Bahasa:
www.pengguna.org.my
English:
www.consumer.org.my
Chinese:
www.cap.org.my

பத்திரிகைச் செய்தி 30.10.2020

# மூத்த குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மலேசியா தயார் நிலையில் இல்லை

---

நாட்டின் ஒட்டுமொத்த மூத்த குடிமக்களின் தேவைகளுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அதை விடுத்து மூத்த குடிமக்கள் ஓய்வு பெறுவதற்கான கிராமங்களை உருவாக்குவது என்பது ஒரு சிறு பிரிவு மூத்த சமுதாயத்தினருக்கு மட்டுமே பயன் தருவதாக அமைந்துவிடும் என்று பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் முகைதீன் அப்துல் காதீர் கூறினார்.

மூத்த குடிமக்கள் வசிப்பதற்கு மற்றும் வேலை செய்வதற்கான ஒரு கட்டமைப்பு, ஒரு பிரத்தியேக உருவரை இல்லாமல் அதிக பட்ச மக்களை, அதிக பட்ச சூழ்நிலையில் பயன்பெறச் செய்யும் தயாரிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு உலகளாவிய உருவரையை (Universal design) அரசாங்கம் உருவாக்க வேண்டும். உலகளாவிய உருவரைக்கு ஒரு நல்ல உதாரணம் கட்டிடங்களில் இணைக்கப்படும் சரிவுப் பாதை (ramp) ஆகும். உடல் ஆரோக்கியம் வேறுபட்டவர்கள் மற்றும் எல்லா வயதினரும், வெவ்வேறு நோக்கங்களுக்காக இதனைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்றார் முகைதீன்.

2030 வருடத்திற்குள் மலேசியாவில் 60 வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை 15 விழுக்காடாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 1970-களில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை வெறும் 3 விழுக்காடு மட்டுமே. இந்த அகன்ற வித்திசாயத்தை வைத்துப் பார்க்கும்பொழுது மலேசியா முதிய சமுதாயத்தினரின் தேவைகளில் அதிகவனம் செலுத்த வேண்டும் என்பது புலனாகிறது.

2018-ல், மலேசியாவின் முதுமை நோய்களுக்கான மருத்துவர்களின் எண்ணிக்கை வெறும் 35 மட்டுமே. ஆனால் நம்முடைய தேவையோ 650 முதுமை நோய் மருத்துவர். இன்னுமொரு பத்து வருடங்களில் நாடு போதுமான முதுமை நோய் மருத்துவர்களை உருவாக்க இயலுமா?

மூத்த குடிமக்கள் பெரும்பாலும் பொருளாதாரத் தடுமாற்றங்களை எதிர்கொண்டிருப்பர். வயது மற்றும் ஆரோக்கிய நிலை காரணமாக அவர்கள் தொழில் புரிய இயலாதவர்கள் என்ற பரவலான நிலையும் அபிப்பிராயமும் இருக்கிறது. அவர்களுடைய ஆரோக்கியப் பிரச்னைகள் (குறிப்பாக நாள்பட்ட மற்றும் பலவீனப்படுத்தும் நோய்கள்) மற்றும் பெருகி வரும் சுகாதார செலவுகள் அவர்களுடைய வாழ்க்கைச் செலவினங்களில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

சேமநிதி வாரிய உறுப்பினர்களில் பாதி பேர் ஓய்வு காலத்திற்காக அவர்களுடைய சேமிப்பில் மவெ. 50,000-க்கும் குறைவான தொகையே வைத்துள்ளனர் என்று செப்டம்பர் 2020-ல் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒரு வருடத்திற்கு மவெ. 1,000 பயன்படுத்தினாலும் கூட அந்தத் தொகை 4 வருடங்களுக்கு மட்டுமே தாக்குப்பிடிக்கும். 90% கிராமப்புற குடும்பங்களுக்கும் 86% நகர்ப்புற குடும்பங்களுக்கும் சேமிப்பே இல்லை என்று சேமநிதி வாரியம் அறிவித்துள்ளது. நிலமை இப்படி இருக்கையில் அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதுகாக்க எங்கிருந்து பணம் வரும் என்றார் முகைதீன்.

சமீபத்திய ஆண்டுகளில், ஓய்வு கிராமங்களை அமைப்பதற்கான ஆக்க முயற்சிகள் அரசாங்கத்தால் வெகுவாகப் பரிந்துரைக்கப்பட்டன. ஆனால் அது போன்ற வசதிகளை மிகச் சிலரே வாங்க முடியும். இப்போதைக்கு மூத்த குடிமக்களுக்கான வீட்டு வசதிகள் மூன்று பெரிய பிரிவில் வருகின்றன. அவை, சமூக நல இலாகாவின் கீழ் இயங்குபவர்கள், அரசாங்க சார்பற்ற அமைப்புகள் மற்றும் ஆதாய நோக்கில் செயல்படும் தனியார் மையங்கள் ஆகும்.

இதுபோன்ற சூழ்நிலையில் அவர்களுக்கு எப்படிப்பட்ட எதிர்காலம் இருக்கப் போகிறது. சமூக நல இலாகாவின் 2018 ஆண்டு அறிக்கைப்படி, அரசாங்க சார்பற்ற அமைப்பு மற்றும் தனியார் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட பராமரிப்பு மையங்களில் 6,927 மூத்தகுடிமக்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்களுக்கான ஓய்வு கிராமங்களை நிறுவும் தனியார் நிறுவனங்களின் முயற்சிகளில் கவனம் செலுத்துவதைவிட சமூக நல இலாகாவின் பங்கினை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஊக்கப்படுத்த வேண்டும். ஓய்வு கிராமங்கள், நாடு முழுக்க உள்ள மூத்த குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவப்போவதில்லை. அரசாங்க சார்பற்ற அமைப்புகள் மூத்த குடிமக்களுக்குப் பலதரப்பட்ட சேவைகளை

வழங்குகின்றன. பகல் நேர பராமரிப்பு மையங்களை இயக்குவது மற்றும் குடியிருப்பு வீடுகளைத் தேவைப்பட்டவர்களுக்கு அமைப்பதற்கான வசதிகளையும் செய்து வருகின்றன.

இந்தப் பராமரிப்பு மையங்கள் மற்றும் குடியிருப்பு வீடுகளின் நோக்கங்கள் வரையறைக்கு உட்பட்டவை. அவற்றால் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மூத்த குடிமக்களுக்கு மட்டுமே சேவைகளை வழங்க முடியும். அவற்றை நிர்வகிப்பதற்கு பெருஞ்செலவாகும். குறிப்பிட்ட முதியோர் ஆரோக்கியமாகவும், சுயமாக இயங்குபவராக இருந்தால், அவர் சமுதாயத் தொடர்பில் இருப்பது நன்மை புரியும். ஆனால் அதற்கு அவருக்குச் சில வசதிகள் செய்து கொடுத்தாக வேண்டும். உதாரணத்திற்கு, சரிவுப் பாதைகள், தடையற்ற வழிப்பாதைகள் போன்ற அவரின் தேவையைப் பூர்த்தி செய்யும் வடிவமைப்புகள் இருக்க வேண்டும்.

சிங்கப்பூரின் வீடமைப்பு மற்றும் கட்டிட வாரியம், சிங்கப்பூரின் மூத்த குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னோடியாகச் செயல்படுகிறது. தன்னுடைய நகர் வடிவமைப்பில் அது உலகளாவிய உருவரையை இ¨ணைத்துள்ளது. குழந்தைகளிலிருந்து முதியோர் வரை, அதனுடைய வீட்டு மேம்பாட்டுத் திட்டத்தில் எல்லா வயதினருக்கும் ஏதுவான வகையில் சமூக வெளியிடங்கள் இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. வயது வித்தியாசம் பாராது, எல்லா வயதினருக்குமான உடற்பயிற்சி வசதிகளையும் சிங்கப்பூரின் வீடமைப்பு மற்றும் கட்டிட வாரியம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. பார்வையற்றோரின் தேவையை நிரப்பும் பொருட்டு பிரெயில் வசதி கொண்ட மின்தூக்கி விசைகளும் இருக்கின்றன.

நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்துகொண்டே வரும் அதே நேரத்தில் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. மலேசியா இந்த சூழ்நிலையைக் கையாள்வதில் தயாராக இல்லை என்றே தெரிகிறது. ஆகையால் அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் உலகளாவிய உருவரையை (Universal Design) பின்பற்றுவது உசிதமானது என்று பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் முகைதீன் அப்துல் காதீர் கூறினார்.

முகைதீன் அப்துல் காதீர்
தலைவர்
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்